# கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

# அருப்புக்கோட்டை.

# அசல் வழக்கு எண்.118/2022

**வா.சா.1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணை - நாள் 09-03-2026

பெயர் = சரஸ்வதி

**வா.சா.1** நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜராகி பிரதிவாதி தரப்பில் கு.வி.-

(1) எனக்கு எழுதப் படிக்கத் தெரியும் என்றால் சரிதான். எனது பிராதிலும், நிரூபண வாக்குமூலத்திலும் உள்ள சங்கதிகளை படித்துப்பார்த்துதான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிர்வழக்குரையை நான் படித்துப் பார்த்தேனா என்றால் படித்துப் பார்த்தேன். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் எனது சகோதரி நீலாவதி எந்த தேதியில், எங்கு வைத்து இறந்தார் என்ற விபரத்தை நான் சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. பிராதில் ஏ-செட்யூல் சொத்து எனது கணவர் வரதராஜன் 20.06.2013 தேதியிட்ட தான செட்டில்மெண்ட் ஆவண எண்.2175/2013 ஆவணம் மூலம் எனக்கு பாத்தியப்படுத்திக் கொடுத்தார் என்றால் சரிதான். பிராது ஏ-செட்யூல் சொத்து எனது கணவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்பதற்கு எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

(2) பிராது ஏ-செட்யூல் சொத்து எனது தனித்த பாத்தியத்தில் வைத்து அனுபவித்து வருவதாக நான் எனது நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளது சரிதானா என்றால் சரிதான். மேற்படி ஏ-செட்யூல் சொத்தை அனுபவம் செய்து வருவதை காட்டக்கூடிய ஆவணம் எதையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்படி அனுபவத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை என்பதால்தான் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் பட்டா 13, 14 ம் வருடம் வரை உள்ளது. பட்டா தாக்கல் செய்ய நான் தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன். எனது பிராதில் ஏ-செடியூலில் எத்தனை இலக்க சொத்துக்கள் உள்ளது என்பதும், பி-செட்யூலில்

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.09 17:00:12 +0530

எத்தனை இலக்க சொத்துக்கள் உள்ளது என்பதும் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

(3) பி-செடியூல் சொத்து எனது மாமனார் ஓ.வி.ரெட்டிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். பி-செடியூல் சொத்தை ஓ.வி.ரெட்டியார் எனது 2 முதல் 4 வாதிகளுக்கு பிரதிவாதியை காப்பாளராக வைத்து தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த போது, எனக்கும், எனது கணவருக்கும் மேற்படி ஆவணத்தை பற்றி தெரியும் என்றால் சரிதான். 1992 ல் எனது வயது என்ன என்றால் 42 வயது இருக்கும், எனது கணவருக்கு என்ன வயது என்றால் 48 அல்லது 49 வயது இருக்கும். 2 முதல் 4 வாதிகளுக்கு பி-செடியூல் சொத்தை பிரதிவாதி ஒப்படைத்துவிடுவார் என்ற நம்பிக்கையில்தான் ஓ.வி.ரெட்டி தான செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான்.

(4) ஓ.வி.ரெட்டி, பிரதிவாதி மீது வைத்த நம்பிக்கையை என் மீதும், எனது கணவர் மீதும் வைக்கவில்லை என்றால் நாங்கள் சிங்கப்பூரில் இருந்தோம், பிரதிவாதிதான் எனது மாமனாரிடம் வாதிகள் சிங்கப்பூரில் இருப்பதால் எனக்கு எழுதிக் கொடுங்கள் நான் 18 வயதானவுடன் அவர்களிடம் ஒப்படைத்து விடுகிறேன் என்று கேட்டு எழுதி வாங்கினார். சட்டப்படி ஒரு குழந்தைக்கு இயற்கை பாதுகாவலர் என்பவர் தாய்தான், அவ்வாறு இருக்கும்பட்சத்தில் எனது மாமனார் என்னை பாதுகாவலராக வைத்து எழுதிக்கொடுக்காமல் எனது சகோதரனை பாதுகாவலராக வைத்து எழுதிக் கொடுத்ததால் என்னால் மேற்படி ஆவணத்தை கேட்க இயலாது என்றால் சரியல்ல.

(5) ஓ.வி.ரெட்டி எந்த தேதியில் இறந்தார் என்றால் 1992 வருடம் 6 வது மாதம் தேதி 20 தா அல்லது 22 ஆ என்று சரியாக தெரியவில்லை, என்னிடம் இறப்புச் சான்றிதழ் உள்ளது. மேற்படி ஓ.வி.ரெட்டியின் இறப்புச் சான்றிதழை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான், 18 வயதான பின்பு எனது மகன்களுக்கு சொத்து வந்துவிடும் என்பதால் நான் தாக்கல் செய்யவில்லை. ஓ.வி.ரெட்டியாரின் இறப்புச் சான்றிதழை நான் தாக்கல் செய்ய தயாராக உள்ளேனா என்றால் தயாராக உள்ளேன், பிரதிவாதிதான் மேற்படி இறப்புச் சான்றிதழை என்னிடம் வாங்கியே கொடுத்தார். ஓ.வி.ரெட்டி எழுதிக்கொடுத்த தான செட்டில்மெண்ட்படி பிரதிவாதி பி-செடியூல் சொத்தை எவ்வித வில்லங்கமும்

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.09 17:00:19 +0530

செய்யாமல்தான் வைத்துள்ளார் என்றால் சரிதான், வில்லங்கம் செய்ய அவருக்கு உரிமையும் இல்லை, அவர் செய்யவுமில்லை. மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் மைனரை பராமரித்தும், நிர்வகித்தும் வரவேண்டியது என்ற சரத்து காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(6) மேற்படி 2 முதல் 4 வாதிகள் பிரதிவாதியின் பராமரிப்பில்தான் இருந்தார்கள் என்றால் சரிதான். எனது நிரூபண வாக்குமூலத்தில் 482/1992 தான செட்டில்மெண்ட் பத்திரத்தை பிரதிவாதியிடம் நேரில் ஒப்படைத்து மேற்படியாரை மேற்பார்வை செய்யும் படி கேட்டுக்கொண்டதாக நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி 482/1992 ஆவணத்தில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். மேற்படி 482/1992 ஆவணம் யார், யாருக்கிடையில் ஏற்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் எனது கணவர் எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணம். வா.சா.ஆ.2 ஆவணமான பட்டா எனது கணவர் பெயரில் உள்ளது என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியமளித்தார்.

(7) எனது கணவரை இவ்வழக்கில் நான் எதற்காக தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் அவருக்கு தமிழ் அவ்வளவாக தெரியாது, மேலும் அவர் வேலை செய்து கொண்டிருக்கிறார், விடுப்பு எடுத்து அவரால் வர இயலாது, அதனால் அவரை தரப்பினராக நான் சேர்க்கவில்லை. மேற்படி காரணத்தை எனது பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் உரிமையாளர்கள் பெயர் என்று யார், யார் பெயர்கள் குறிப்பிட்டுள்ளது என்றால் ராஜன், ரமேஷ், ரவி, கார்டியன் ஜெயராம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்து சாட்சியமளித்தார். மேற்படி ஆவணம் 11.10.2022ம் தேதியில்தான் தரவிறக்கம் செய்யப்பட்டது என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு சரிதான் என்று சாட்சியமளித்தார்.

(8) வா.சா.ஆ.3 ஆவணத்தை தரவிறக்கம் செய்து அடுத்த மாதமே வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் பிரதிவாதி எனது 3 மகன்களுக்கும் வழக்கறிஞரை வைத்து அறிவிப்பு அனுப்பினார், பிரதிவாதியிடம் சென்று ஆவணத்தை கேட்டபோது நோட்டரியில் எனது பெயரும், எனது மகன்கள் பெயர்களும் இடம்பெற வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார், அதையும் கொடுத்தோம், அப்போதும் பிரதிவாதி ஆவணத்தை தர முன்வரவில்லை, வழக்கு தாக்கல் செய்யச் சொன்னார், அதனால் மேற்படி ஆவணத்தை தரவிறக்கம் செய்து வழக்கு தாக்கல் செய்தேன்.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.09 17:00:26 +0530

எனது கணவர் பிரதிவாதிக்கு 10.06.2014 ம் தேதியில் தாவா சொத்துக்களை பராமரித்து வரச் சொல்லி பவர் எழுதிக் கொடுத்தார் என்றால் பிரதிவாதி எனது கணவரிடம் யார் சொத்தை பராமரிக்கிறாரோ அவருக்கு கையெழுத்துப் போட்டு தரவேண்டும் என்று கூறி மேற்படி ஆவணத்தை படித்துப் பார்க்கும்முன்பே கையெழுத்து பெற்றுக்கொண்டார்.

(9) தாவா சொத்து சம்மந்தப்பட்ட அசல் ஆவணங்களை தரக்கோரி பிரதிவாதியிடம் நேரடியாக சென்று கேட்டேனா அல்லது தொலைபேசி மூலம் கேட்டேனா என்றால் அவர் வீட்டில் தங்கியிருந்து நேரடியாக கேட்டேன். அவ்வாறு கேட்கும்போது என்னுடன் யாரும் இருந்தார்களா என்றால் எனது கணவர், எனது பிள்ளைகள் மூன்று பேருமே திருமணத்திற்கு வந்ததால் அவரது வீட்டில்தான் இருந்தார்கள். எந்த தேதியில் நான் அவரது வீட்டில் தங்கியிருந்து கேட்டேன் என்றால் 14.03.2010 ம் தேதி திருமணம் மேற்படி தேதிக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே பிரதிவாதியின் வீட்டிற்கு வந்து தங்கியிருந்தோம். நான் 2010 ல் கேட்கும்போது வா.சா.ஆ.6 ஆவணம் எழுதப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணத்தை சேகரன் என்பவரிடம் பிரதிவாதியை தாவா சொத்தின் அசல் ஆவணங்களை ஒப்படைக்கச் சொல்லி எனது கணவரும், எனது மகன்களும் எழுதிக்கொடுத்தனர் என்றால் சரிதான்.

(10) வா.சா.ஆ.6 ஆவணத்தை சேகரன், பிரதிவாதியிடம் காண்பித்து ஆவணங்களை தருமாறு கேட்டாரா என்றால் கேட்டார், பிரதிவாதி மேற்படி ஆவணத்தை எனது வழக்கறிஞரிடம் காண்பித்து தருகிறேன் என்று சொல்லி பின்பு தரவில்லை. எந்த தேதியில் சேகரன் பிரதிவாதியிடம் வா.சா.ஆ.6 ஆவணத்தை காண்பித்து கேட்டார் என்று எனக்கு தெரியுமா என்றால் தேதி ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.6 ஆவணத்தில் என்னென்ன ஆவணங்கள் பிரதிவாதியிடம் உள்ளது என்று சொல்லவில்லை என்றால் பிரதிவாதி எங்களிடம் எங்களது பெயரை மட்டும்தான் குறிப்பிடுமாறு கேட்டார் அதனால் ஆவணங்களை குறிப்பிட்டு சொல்லவில்லை. வா.சா.ஆ.6 ஆவணம் எம்.எஸ்.ராஜேந்திரன் அவர்கள் முன்னிலையில்தான் கையெழுத்திடப்பட்டது என்றால் சரிதான்.

(11) வா.சா.ஆ.5 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி யார், யாருக்கெல்லாம் அனுப்பியுள்ளார் என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.09 17:00:33 +0530

பார்த்துவிட்டு எனக்கும், ரமேஷ், சேகரன் ஆகிய மூன்று பேர்களுக்கும் அனுப்பியுள்ளார் என்று சாட்சியமளித்தார். வா.சா.ஆ.4 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பை பிரதிவாதி யார், யாருக்கெல்லாம் அனுப்பியுள்ளார் என்றால் சாட்சி மேற்படி ஆவணத்தை பார்த்துவிட்டு ராஜன், ரமேஷ், ரவி ஆகிய மூன்று பேர்களுக்கும் அனுப்பியுள்ளார் என்று சாட்சியமளித்தார். வா.சா.ஆ.4 ஆவணம் எனக்கு அனுப்பாமல் எனது மகன்களுக்கு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.4 ஆவணம் பற்றி எனது மகன்கள் என்னிடம் தெரிவித்ததன்பேரில்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான், மூன்று பேரும் என்னிடம் மேற்படி ஆவணத்தை பற்றி கூறினார்கள்.

(12) மேற்படி வா.சா.ஆ.4 ஆவணத்தில் தாங்கள் மூவரும் ஒரு பவர் ஏஜெண்டாக ஒருவரை நியமித்து, அவர் பெயரில் பதிவு செய்து கொடுக்க நினைத்தாலும் தாங்கள் மூவரும் ஒன்றுசேர்ந்து அதற்கான எழுத்துப்பூர்வமான ஆவணத்தை எமது கட்சிக்காரரிடம் சமர்ப்பித்து அதன்படி எமது கட்சிக்காரர் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு தங்கள் பெயர்களுக்கோ அல்லது தங்களின் ஆதரவு பெற்ற நபர்களுக்கோ பத்திரம் பதிவு செய்து கொடுக்க தயாராக உள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பிற்கு தற்போதுவரையிலும், நாங்கள் பதில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.6 ஆவணம், வா.சா.ஆ.4 ஆவணத்திற்கு பிறகு ஏற்பட்டது என்பதால்தான் அதனை பிரதிவாதி வசம் சமர்ப்பிக்கவில்லை என்றால் சரிதான்.

(13) பிரதிவாதி மீது மல்லாங்கிணறு காவல் நிலையத்தில் ஒரு புகார் மனு நான் கொடுத்தேன் என்றால் சரிதான். மேற்படி புகார் மனுவை குறித்து எனது பிராதிலோ, நிரூபண வாக்குமூலத்திலோ சொல்லவில்லை என்றால் சரிதான். காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்றால் பிரதிவாதி எனது மகன்கள் மூன்றுபேரிடம் No objection சான்றிதழ் கேட்டார். காவல் நிலையத்தில் வா.சா.ஆ.6 ஆவணத்தை பிரதிவாதியிடம் காண்பித்தேனா என்றால் காவல் நிலையத்தில் வைத்துதான் பிரதிவாதியிடம் மேற்படி ஆவணத்தை காண்பித்தோம். பிரதிவாதியின் மகன், மகள் உள்ளிட்ட பிரதிவாதியின் குடும்பத்தாரை பற்றி திட்டி ஒரு கடிதம் எழுதி ஊர் மக்களிடம் பிரஸ்தாபித்தேன் என்றால் இல்லை. மேற்படி கடிதம் பற்றி ஊர்மக்களிடம் விசாரித்தால் உண்மைதன்மை தெரியவரும் என்றால் சரிதான், ஊர் பொதுமக்களின் வீட்டு முகவரி எனக்கு தெரியாது.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.09 17:00:38 +0530

(14) மேற்படி கடிதம் சம்மந்தமாக ஊர் பொதுமக்களை விசாரிக்க எனக்கு ஆட்சேபனை இல்லை என்றால் சரிதான், எனக்கு சரியாக எழுத வராது. உண்மை சங்கதிகளை மறைத்து பொய்யான விவரங்களுடன் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு பரிகாரத்திற்கும், நீதிமன்ற கட்டணத்திற்கும் முரண்பாடு இருப்பதால், இவ்வழக்கு சட்டப்படி தாக்கல் செய்ய இயலாது என்றால் சரியல்ல. விளம்புகை பரிகாரம் கோராமல், நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைநிற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக உடைமை மற்றும் உரிமை ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சுத்தமான கரங்களுடன் இந்நீதிமன்றத்தை நாடாததால் எனக்கு வழக்கு பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

SIVARANJINI P
Digitally signed by SIVARANJINI P
Date: 2026.03.09 17:01:00 +0530